# முல்லையில் அதிரடி, 8 படையினர் பலி ஆயுதம் மீட்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 22 இதழ்: 177
யாழ்ப்பாணம் புதன்கிழமை 7-8-1991

## 3 காவலரண்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் எட்டுஇராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மூன்று காப்பரண்கள் முற்றாக அழிக்கப்பட்டதுடன் பல ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

(2ம் பக்கம் பார்க்க]

## அரசியல் தஞ்சம் கோர கிட்டு தகுதியற்றவர்

### பிரிட்டன் அறிவிப்பு

[லண்டன்]
விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோர தகுதியற்றவர் என பிரிட்டிஷ் உள்துறை செயலகம் நேற்று திரு. கிட்டுவுக்கு அறிவித்துள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளை விரட்டுவது தவறான செயலாகும்

(சென்னை)
இலங்கைப் பிரச்னைக்கு தீர்வுகாணமுன் தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து விரட்டுவது பிழையான செயலென

[2ம் பக்கம் பார்க்க]

### ஆனையிறவு முகாம் பிரவேசத்தின் பின்னர்

# காயமடைந்த 50 சிப்பாய்களை

# வெளியேற்ற முடியாது தவிப்பு!

## ஹெலிகளை இறங்கவிடாது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)
ஆனையிறவு முகாமினுள் இராணுவத்தினரின் பிரவேசத்தின் பின்னர் இடம்பெற்ற சண்டையில் காயமடைந்தவர்களில் 6 இராணுவத்தினர் பலியானதாகவும் மேலும் காயமடைந்த 50 படையினரை சிகிச்சைக்காக வெளியே கொண்டு செல்ல முடியாதிருப்பதாகவும் இவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் கொழும்பில் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் முகாமிற்கு வெளியே எடுத்துச் சென்று சிகிச்சையளிக்க முடியாத படையினருக்கு முகாமிற்குள் வைத்து இயன்றளவு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

இதேவேளை இம்முகாமிற்குள் சென்று மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியாத அளவிற்கு புலிகளின் தாக்குதல் அதிகரித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறி

(4ம் பக்கம் பார்க்க)

## மகிழ்வுடன் இயக்கத்தில் இணைந்த 3 மாணவிகள்!

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பிலுள்ள கல்லூரி ஒன்றில் கற்கும் மூன்று மாணவிகள், இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த 17 வீரவேங்கைகளின் பூதவுடல்கள் அங்கு இருந்து எடுத்துச் செல்லப்பட்டபோது தாங்களும் போராட்டத்தில் இணைவதற்காக அங்கு வந்த மகளிர் படை வாகனம் ஒன்றில் ஏறிச்சென்றனர்.

4-ம் பக்கம் பார்க்க)

## சகல கட்சிகளுடன் மீண்டும் பேச்சு நடத்த கோரிக்கை

(கொழும்பு]
இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு சகல அரசியல்கட்சிகளுடனும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துமாறு ஜனாதிபதி ஆர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகள் மீண்டும் தாக்கலாம்

(கொழும்பு)
ஆனையிறவுமுகாம் மீது புலிகள் மீண்டும் ஒரு பெரும் தாக்குதலை மேற்கொள்ளலாமென இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் அச்சம் தெரிவித்துள்ளார்.

முகாமின் மேற்குப் பகுதியிலிருந்து புலிகள் விலகிச் செல்வதாகவும், மீண்டுமொரு பாரிய தாக்குதலை நடாத்தும் யுக்தியாக இது அமையலாமென்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை முகாமை சுற்றிய பகுதிகளை ஹெலி மூலமே கண்காணிக்க வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(சி-153)

### மோதலை தீர்த்துவைக்க

## மத்தியஸ்த முயற்சிகள் புதுப்பிக்கப்பட வேண்டும்

(கொழும்பு)
"சிறிலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மோதலைத் தீர்த்துவைப்பதற்கான மத்தியஸ்த முயற்சிகள் புதுப்பிக்கப்படவேண்டும்'' என்று அகதிகளுக்கான அமெரிக்கக் கமிட்டியின் சிரேஷ்ட கொள்கை ஆய்வாளரான போல் ரூபின்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகளின் நிலபரங்களைப் பார்வையிடுவதற்காகத் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் அண்மையில் விஜயம் மேற்கொண்ட பின்னர் அமெரிக்கா திரும்பிய பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கை

(4ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்னை தீர்ந்தாலே எரிபொருள் விநியோகம்

(கொழும்பு)
யாழ். மாவட்டத்தில் பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் மீண்டும் இயங்குவதாயின் இனப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்ட பின்னரே அது சாத்தியமாகும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இது குறித்து மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டப் பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் மீண்டும் இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. அங்கு சீரான எரிபொருள் விநியோகம் நடைபெறுவதாயின்

(4-ம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க

## பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பீடம்

(நியூயோர்க்)
அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள சக்மண்டோ பல்கலைக்கழகத்தில் 'தமிழ்ப் பீடம்' அமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கான முயற்சியில் மேற்படி பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது.

சக்மண்டோ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொறியியலாளர் ஒருவர் இம்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்றும், இம்முயற்சிக்கு 4 லட்சம் அமெரிக்க டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## பதினறு இராணுவம் பலி மேலும் 21 பேர் படுகாயம்

[கொழும்பு]
ஆனையிறவு முகாமிற்குள் படையினர் பிரவேசித்த பின்னர் இடம்பெற்ற மோதல்களில் பதினறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 21 பேர் காயமடைந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

முகாம்களைச்சுற்றி நிலைகொண்டுள்ள விடுதலைப்புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

முகாமை மீண்டும் தாக்க கடந்த ஞாயிற்றுகிழமை புலிகள் முயற்சி செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆனையிறவு பகுதியில் கண்ணிவெடி வயல்கள்

(கொழும்பு)
ஆனையிறவு முகாமைச் சுற்றிய பகுதிகள் 'கண்ணிவெடி வயல்களாக' காட்சிதருவதாக கொழும்பில் இராணுவ அதி

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வியாபு மாற்றம்

வியாழமாற்றமும், ஸ்ரீரமண பகவான்-ஸ்ரீ சத்ய சாயிபாபா அவதார புருஷர்களின் ஒரே விதமான ஜெனனகால ஜாதகங்களும், விலை 6/50 எங்கும் விற்பனையாகின்றன. கனகா ரேடர்ஸ் திருநெல்வேலி நூலாசிரியர் Prof. சத்தியதாஸன் சித்தன்கேணி. (சி-5084)

## புலமைப் பரிசில் பரீட்சை

[ஆண்டு 5]

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 9வது, 10வது வினாத் தாளைப்பெருதவர்கள் அதனைப் பெற்றுவிடை எழுதித்தந்தால் இலவசமாக உடன் திருத்திக் கொடுக்கப்படும். புதிய புலமைப்பரிசில்மாதிரிப்பயிற்சியும் கடந்த கால வினாத்தாளகளையும் மலிவாகப்பெற்றுக்கொள்ளலாம்; புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-5081]

## தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதைகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ 1482)

வட்டுக்கோட்டை பிரகுகன் தொழிற்சாலைக்கு, பற்பொடி அப்பளம், பவுடர், சோக், கற்பூரம், ஜாம், பலகாரங்கள், இனிப்பு வகைகள் தயாரிப்பதற்கு ஆண், பெண் இருபாலாரும் மற்றும் வியாபார அனுபவமுள்ளவர்களும் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- பிரகுகன் தொழிற்சாலை, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. [சி-5082]

## கடவுச்சீட்டு படிவங்கள்

(மானிப்பாய்)

கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்கள் ஒரு தொகை யாழ் செயலகத்திற்கு வந்து சேர்த்துள்ளதாக அறியப்படுகிறது.

---

## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

### விதை நெல்/பாவனைக்குரிய நெல் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கான

# கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழகம் தனது கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் (இராமநாதன் விவசாயப்பண்ணை) உற்பத்திசெய்த பின்வருவனவற்றை விற்பனை செய்வதற்காக கேள்விப்பத்திரங்களை அழைக்கின்றது.

1. விதை நெல் – இனம் BG - 350
   BW - 351
2. பாவனைக்குரிய நெல் - மேற்படி இனங்கள்

விதை நெல் விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்யப்படும்.

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்போர் பின்வரும் விபரங்களை குறிப்பிடல் வேண்டும்.

1. தேவைப்படும் இனம்
2. தேவைப்படும் அளவு
3. புசல் ஒன்றுக்கு செலுத்த விரும்பும் விலை
4. விதை நெல்/பாவனைக்குரிய நெல் என்பதை குறிப்பிடவும்.

விற்பனை விலை, விற்பனை செய்யக்கூடிய அளவு ஆகியவை பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ் பல்கலைக்கழக கேள்விச் சபையினால் தீர்மானிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியினையோ ஏற்கும்/நிராகரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்துக்கு உரியது.

யாழ் பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

கேள்விப்பத்திரங்கள் 1991-08-17 ம் திகதி பி. ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**நிதியாளர்**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

கேள்விப்பத்திர தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''நெல் விற்பனைக்கான கேள்விப்பத்திரம்'' எனக்குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1991-08-17 ம் திகதி பி. ப. 2.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

— பதிவாளர்

[எ 1481]

---

# நிரந்தரமாக்க முயற்சிப்பேன்

(யாழ்ப்பாணம்)

''யாழ். கல்வித்திணைக்களத்தினுள் அடங்கியுள்ள சிற்றூழியர்கள் அநேகர், நீண்டகாலமாக அமைய ஊழியர்களாக கடமை பார்க்கிறார்கள். இவர்கள் விடயத்தில் அக்கறை செலுத்தி மேலிடத்தோடு தொடர்பு கொண்டு நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்''.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் யாழ். கல்வித்திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் அமைய சிற்றூழியர்களின் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார்.

பத்துக்கு மேற்பட்ட வருடங்கள் அமைய ஊழியர்களாக பல சிற்றூழியர்கள் கல்வித்திணைக்களத்தில் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (152]

# பிரார்த்தனை

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் போராளிகளின் வெற்றி வேண்டிக் கூட்டுப் பிரார்த்தனையும், விசேட பூசையும் இடம்பெற்றன.

ஆனையிறவு, வெற்றிலைக் கேணி போன்ற இடங்களில் எதிரிகளுடன் களத்தில் நின்று போராடிக் கொண்டிருக்கும் புலிப்படை வீரர்கள் உயிர் ஆபத்துக்கள் உடல் ஊனங்கள் இன்றி வெற்றியுடன் திரும்பவேண்டுமென வேண்டி இவ்வைபவம் இடம்பெற்றது.

* * *

(கிளிநொச்சி]

கிளிநொச்சி சந்தை புடவை வர்த்தகர்கள் மறதும் வர்த்தக சங்கத்தினர் சிற்றூரவைகள் விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு உணவு வகைகளை வங்ழகியுள்ளனர். இதுதவிரப் பாரதிபுரத்தில் போராளிகள் வெற்றிபெறக் கோரி ப்ாதயாத்திரை மேற்கொள்ளப்பட்பட்டது. (83]

* * *

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி அருள்மிகு சிவன் கோவிலில் இரவு, பகல் 24 மணித்தியாலயம் தொடர்ந்து தமிழ் ஈழப்போராட்டம் வெற்றி பெற வேண்டி பிரார்த்தனை நடைபெற்று வருகிறது; சரசாலை இந்து இளைஞர் மன்றப் பஜனைக்குழுவினர் தினமும் பங்குபற்றிப் பிராத்தனையில் ஈடுபட்டு வருகின்றனர். (154)

* * *

(கொழும்புத்துறை)

சரசாலை நுணுவில் அருள் மிகு சிதம்பர விநாயகர் ஆலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஆனையிறவு போரில் போராளிகள் வெற்றி பெறவேண்டியும், நாட்டு மக்கள் நலன்பெற வேண்டியும், தமிழ் ஈழம் விரைவில் மலர வேண்டுமென்றும் கூட்டுப் பிராத்தனைகள், வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

* * *

[கொழும்புத்துறை)

ஆனையிறவுப் போரில் தீரத்துடன் போராடும் போராளிகளுக்கு ஆத்மபலம் வேண்டியும், வீரமரணமடைந்த வேங்கைளின் ஆத்மா சாந்தியடையவும் காயமடைந்த போராளிகள் தேகநலம்பெறவும்வேண்டி யாழ் மாநகரசபையில் அமைந்திருக்கும் 'ஞான வைரவர் ஆலயத்தில் விசேட பூஜையும், பிரார்த்தனையும் இடம்பெற்றது.

* * *

[கொழும்புத்துறை]

தமிழீழ மண்மீட்பு போராட்டத்தில் களத்தில் இருக்கும் போராளிகளின் நலன் வேண்யும் தற்சமயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மோதலில் விடுதலைப்புலிகள் வெற்றிபெற வேண்டும் என்று கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அமைந்திருக்கும் வைரவர் ஆலயத்தில் விஷேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்றது.

---

# சுழற்சி முறையில் இரத்ததானம் செய்ய ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். சென்றேக்ஸ் சனசமூக நிலையத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்த தானத்தை சுழற்சிமுறையில் வழங்கிவருகின்றனர்.

இதன்பிரகாரம் கடந்த மாதம் சனசமூக நிலைய அங்கத்தவர்களும், சென். றேக்ஸ் சுகாதாரக் குழுவினரும் இரத்த தானம் செய்தார்கள்.

தொடர்ந்து சென். றேக்ஸ் சனசமூகநிலையம் சென். றேக்ஸ் மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கம், புனித ஆரோக்கியநாதர் பாடகர் சபை சென். றேக்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் சுழற்சி முறையில் இரத்த தானத்தில் பங்குகொள்ளவிருக்கின்றனர். (154)

## அரசியல் தஞ்சம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு: கிட்டு, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவிற்கு பணம் சேகரித்தார் எனவும் மற்றும் பிரிட்டனில் உள்ள தமிழர்களிடம் பணம் அறவிடுவதில் ஈடுபட்டார் என்றும் உள்துறை செயலகம் குற்றம் சாட்டியுள்ளது

இதேவேளையில் திரு. கிட்டு தான் ஏன் பிரிட்டனைவிட்டு வெளியேற்றப்படக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுவதற்கு இம்மாதம் 17-ம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

## முல்லையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக்காலை 9-20 மணியளவில் ஆரம்பித்த இத்திடீர் தாக்குதலில் புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர்.

முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவதிதினரின்காப்பரண்கள் மீது புலிகள் திடீர் அதிரடித் தாக்குதலை நடத்தினார்கள். இத் தாக்குதலில் காப்பரண்கள் முற்ருகத் தகர்க்கப்பட்டுள்ளதுடன் காப்பரணிலிருந்து எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

ஏ.கே.எல்.எம் ஜீ-2, இதற்குரிய ரவைக்கூடுகள்-6, லிங்-550, ஆர். ஜி. பி-1, இதற்குரிய எறிகணைகள்-3, புறப்பிளர்கள்-3, ரி 56 ரக துப்பாக்கி-3, இதற்குரிய ரவைக்கூடுகள்-4, ரி-81 ரக துப்பாக்கி-3, தொலைத்தொடர்பு சாதனம்-1, நடுத்தர ரவைகள்- 964, குண்டுதுளைக்காத கவச அங்கிகள்- 4 ஆகிய ஆயுதங்களே இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2வது லெப்டினன் பானு [சி. செந்தில் குமார் முல்லைத்தீவு], சி. ரமேஸ் சிரன் [சி. ரமேஷ்குமார் குமுழமுனை] ஆகியோர் வீர மரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஈழ அகதிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்தமிழர் பேரவைத்தலைவக திரு ஜனார்த்தனன் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு முதலில் தஞ்சமளித்துவிட்டு இப்போது அவர்களை விரட்டியடிப்பது சரியல்ல. அவர்களை திருப்பி அனுப்பமுன் இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டுமென்ருர். [சி]

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

[ஆனைக்கோட்டை]

ஸ்ரீ வீரமாபிடாமி அமபாள் ஆலய புதிய சித்திரமணித் தேர் வெள்ளோட்டம் நாளை 8ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் புதிய தேரின் சிற்பாசாரியாரான திரு: அ. இராசரத்தினத்துக்கு 'தேவரத் சிற்பமணி'' என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கப்படவுள்ளது. [வி]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் நிழலில்:
21 | 03 | 1978
★ ★



ஆண்டவன் கழலில்:
07 | 08 | 1990
★ ★

## செல்வன் இ. குயின்ரஸ்

[பற்றிக்ஸ் மாணவன்]

ஆண்டொன்ற ஆனதையா
ஆறவில்லை எம் நெஞ்சம்
அமலன் யேசு அருகிருந்து
எம்மவர்க்காய் வேண்டிடுவாய்

புதுமடம் கர்த்தர் தேவாலயத்தில் 09-08-91 காலை 6.00 மணிக்கு இரங்கற்பலிபூசை ஒப்புக் கொடுக்கப்படும். இல்லத்திலும், அதேதினம் அனைவரையும் அழைக்கின்றோம்.

இராசநாயகம் குடும்பத்தினர்

புதுமடம்,
உடுவில் தெற்கு.

[சி 5083]

# புரட்சிகர தலைமைகளாக கிராமிய தலைமைகள் மாற்றப்படவேண்டும்

## - தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி -

(யாழ்ப்பாணம்)

''கிராமியதலைமைகள் புரட்சிகரத்தலைமைகளாக மாற்றப்படவேண்டும்'' என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிஅரசியல் பொறுப்பாளர் மூர்த்தி தெரிவித்தார்.

கோண்டாவில் தலைமைச் செயலகத்தில் யாழ். மாவட்ட சிற்றூரவைத் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

மேலும் அவர் அங்கு பேசுகையில் கூறியதாவது: தலைமை என்பது தனது எல்லைக்குள் வாழும் அனைத்து மக்களினதும் சமூக, பொருளாதார அரசியல் வளர்ச்சிக்கு முழுமையாக வழிகாட்டி வழிநடத்துவதேயாகும். இதற்கு நேர்மை, இலட்சியம், உறுதி, சேவைமனப்பான்மை, தலைமை தாங்குபவனுக்கு அவசியமானதாகும். இதில் ஒன்று இல்லாவிட்டாலும் கூட மக்களுக்குத் தலைமை தாங்கமுடியாது.

எமது மண்ணில் ஏற்பட்ட அரசியல் தேவையான ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்குமுன் இருந்த அரசியல் கட்சிகளாயினும் சரி, தொழிற் சங்கங்கள் ஆயினும் சரி, கிராமியத் தலைமைகளாயினும் சரி இத் தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை மாறாக தந்தை செல்வாவைத் தவிர தலைவர்கள் என்றிருந்தோர் தமது குடும்ப நலன்களுக்காகவுமே தலைமைகளைப் பயன்படுத்தினர்கள். இது அரசியல் கட்சிகளிலிருந்து தொழிற்சங்கம் கிராமியத் தலைமை வரையும் இப்படியே அமைந்திருந்தது. இங்கு பாராளுமன்ற அரசியல் நடத்தியவர்கள் உறுப்பினராக வந்ததும் முதல் வேலையாக லண்டனுக்கு தமது பிள்ளைகளைப் படிக்க அனுப்பியதும், காணி சேர்ப்பதும், தன்னேடு திரிந்த ஒரு சிறு குழுக்களுக்கு அரச உத்தியோகம் எடுத்துக் கொடுத்ததோடு தங்களது கடமை என்று இருந்தார்கள். இதற்கு கிராமியத் தலைமைகளைப் பாவித்தார்கள். இந்த மக்களுக்கும், அரசியல் தேவையில்லை. தம்மோடு சேர்ந்த சிலர் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட முறையிலான அரசியல் அறிவைப் பெற்றிருந்தால் காணும் என்ற நிலையிலேயே வளர்த்திருந்தார்கள். இதன் காரணமாகத்தான் கிராமியத் தலைமைகள் கூட்டம் வைப்பதும் மேசையிலிருந்து கொண்டு கதைப்பதும் தான் அரசியல் வேலையென நினைத்து இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதன் தாக்கம்தான் நாம் ஆரம்பித்த கிராமியத் தலைமைகளிலும் சிற்றூர் அவைகளிலும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் பழைய தலைமைகள் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை மாத்திரம் மக்களிடம் வந்து தம்மைப் புள்ளடி போட்டுப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுவதோடு இவர்களின் அரசியல் முடிவடைந்து விடுகிறது. இது ஒரு திருவிழா மாதிரியே நடைபெறுகிறது. ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கொரு முறை மூன்று மாதம் இத்திருவிழா நடைபெறும். இந்நாளில்தான் வீடுவீடாகச் சென்று மக்களைப் பார்த்துக் கையெடுத்து வணங்குவதும், மக்களின் குசலம் விசாரிப்பதும் நடைபெறுகிறது. இது இவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக வரவேண்டும் என்பதற்காக மாத்திரம் செய்கிற வேலையாகவே இருந்தது, இத்தோடு மக்கள் மதியிலான இவர்களின் அரசியல் பெரும்பாலும் முடிந்துவிடுகிறது. இத்தலைவர்கள் மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குக் கூட அக்கறை எடுக்கவில்லை. மொத்தத்தில் நான் முன் கூறிய மாதிரித் தமது பதவி, சுகபோகம் என்பதில் மாத்திரமே அக்கறையாக இருந்தார்கள்.

இக்காரணங்களால் இங்கு பெரும் பகுதி படித்த மக்களுக்குக்கூட அரசியல் தமக்குத் தேவையில்லை என்று நினைத்தே வாழ்ந்து வந்தார்கள். பொதுவாக மக்கள் தமக்கும் இந்த அரசியலுக்கும் சம்பந்தம் இல்லையென்று நினைத்தே வாழ்ந்து வந்தார்கள், இதனால் தான் இங்கு சமூக வளர்ச்சி ஏற்படாது சமூகங்களுக்குள் சாதிப் பிரிவினைகள், சமயப்பிரிவினைகள், பிரதேச வேறுபாடுகள் உருவாகி மக்கள் கூறு கூறுகப் பிரிந்து வாழ்ந்து வருவதையும், இதனால் சமூக வளர்ச்சி முற்றுகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் நாம்காணக் கூடியதாக இருக்கிறது. இதனால் மனித தேவைகளான காதல், திருமணம் இப்பிரிவினைகளாலும் சீதனம் என்ற கொடுமைகளாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது

பொருளாதார வளர்ச்சியும் குன்றியேயுள்ளது: எமது மண்ணில் போதிய வளம் இருந்தும், எமக்குத் தேவையானதை நாமே உற்பத்தி செய்யாது அந்நிய தேசத்தை நம்பி வாழ்கின்ற மனநிலை இம்மக்களிடம் வளர்க்கப்பட்டிருக்கின்றது தேவைக்காகப் பயிர் செய்கிற நிலை மாறி காசுக்காகப் பயிர் செய்கின்ற மனநிலையே வளர்க்கப்பட்டிருக்கின்றது- இது போன்ற எமக்குத் தேவையான தொழில் உற்பத்தித்துறைகளும் இருக்கின்றன: சமீப காலமாக எமது தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் நடவடிக்கைகளால் சில மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதை வளர்த்தெடுக்க வேண்டியது இம்மண்ணில் பிறந்த அனைத்து மக்கள் கடமையாகும்.

இம்மண்ணில் பிறந்தவர்கள் இம்மண்ணில் வாழப்பயந்து வெளிநாடுகளில் போய் அகதியாக வாழ்கின்ற மனநிலையும் வெளிநாடுகளில் பணம்உழைக்கப்போகின்ற மனநிலையும் வளர்க்கப்பட்டிருக்கிறது. இங்கு வாழ்வின் அர்த்தமே பிழையாக கொள்ளப்பட்டிருக்கிறது. சிங்கள இனம் இலகுவாக இம்மண்ணைக் கைப்பற்றி எம் மக்களை அடிமை கொள்ளவே இம்மனநிலைஉதவுகிறது.

நாம் வாழவேண்டுமென்றால் நாம்போராடவேண்டும் என்ற மனித வாழ்வின் தேவை இங்கு பெரும் பகுதியாக உணரப்படாதநிலை உடன் மாற்றப்படவேண்டும். இதில் அடக்கப்பட்ட இனம் வாழவேண்டும் என்றால், தனக்கு என ஒரு படை அமைத்துப் போராடி தனக்கென ஒரு அரசு அமைக்காவிடில் அடிமையாக வேறு ஒரு இனத்திற்கு அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி வாழ வேண்டும் என்பதுதான் வரலாறு. அதுபோன்று இன்று எமக்கென்று ஒரு பெரும்படை உருவாக்கப்பட்டு வளர்ந்து வருகிறது. இப்படையணியை வளர்த்து வீட்டுக்கொருவர் என்ற நிலையில் இதில் இணைந்து எதிரியை இம்மண்ணை விட்டே துரத்தி எமது அரசை உருவாக்கவேண்டியது எமக்குமுன் உள்ள தேவையாகும்.

இந்நோக்கிற்காகவே இங்குள்ள தொழிற்சங்கங்கள், கிராமியத் தலைமைகள் உழைக்கவேண்டும். இதற்கு இத் தலைமைகளுக்கு இருக்கவேண்டிய அம்சம் மக்கள் மீது உண்மையான அன்பு வைப்பதேயாகும். குறிப்பாக இத்தலைமைகள் சமூகத்தில் பாதிக்கப்பட்டு அடிமட்டத்தில் வாழுகின்ற மக்கள் மீதே உண்மையான அன்பு ஏற்படவேண்டும் இம்மக்களின் சமூக, பொருளாதார அரசியல்வளர்ச்சிக்கு வழிகாட்டி வழிநடத்துவதன் மூலம்தான் ஒரு சரியான அரசியலை இம்மண்ணில் உருவாக்க முடியும். இதுதான் எமது புரட்சிகர அரசியல் வேலைத்திட்டமாகும். ஆகவே, இம்மண்ணில் உள்ள இத்தலைமைகள் இப்புரட்சிகர கடமையை உடன் நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்' என்று தெரிவித்தார்.

## பெண் தலைமை நீதிபதி

(புதுடில்லி)

இந்தியாவிலேயே முதன் முறையாக உயர்நீதிமன்றத்துக்கு பெண் ஒருவர் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

செல்வி லீலா சேச் என்பவரே ஹிமாலயப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ள முதற்பெண் தலைமை நீதிபதி யாவார். (பூ)

## துணிகரத் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை வீதியில் உள்ள பலநோக்குச் கூட்டுறவுச் சங்கக் கிளையில், நேற்று முன்தினம் இரவு துணிகரத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இக்கடையில் இருந்த 120 லச்ஸ்பிறே பைக்கட்டுகள் உட்பட பருப்பு, சீனி, ஹைலண்ட் மா பைக்கெட் போன்ற பொருட்கள் திருடப்பட்டதாகத் தெரியவருகிறது. (வி)

## சுடர் விடும் சுதந்திரம்!

எங்களின் மூத்தோர் எதிரியை வென்றுடல்
ஆர்த்ததும் இந்நாடே! - அவர்
தங்களின் ஆயிரம் கலைகளி னுயிர்
காத்ததும் இந்நாடே! - உயர்
மங்கள மாயொரு மானுட அன்பினை
வார்த்ததும் இந்நாடே! - அட!
செங்கள மாடிடும் சிறுமலர் ஆயிரம்
பூத்ததும் இந்நாடே! - இதை
வந்தனை! வந்தனை! என்று தினம்யான்
நின்று வணங் கேனே! - இதை
வந்தே பாரீர்! வந்தே பாரீர்
என்று முழுங் கேனே!!

சிந்தையி லாடிடும் சிறுத்தைக ளாயுதம்
சேர்ப்பதும் இந்நாடே! - அதன்
முந்தைய கோழையர் முடிவுக ளாலுடல்
வேர்ப்பதும் இந்நாடே! - தமிழ்
விந்தையி னுயர் விடுதலை வேட்டுகள்
தீர்ப்பதும் இந்நாடே! - ஒரு
கந்தையி லாடினும், காவிய சுதந்திரம்
காப்பதும் இந்நாடே! - இதை
வந்தனை! வந்தனை! என்று தினம்யான்
நின்று வணங் கேனே! - இதை
வந்தே பாரீர்! வந்தே பாரீர்!
என்று முழங் கேனே!!

— ஜெ. கி. ஜெயசீலன்

## இராசி பலன்

07 - 08 - 1991
(தமிழ்த் திகதி ஆடி 22)
புதன்கிழமை

துவாதசி பி. ப. 3-52 வரை திருவாதிரை பி. இ. 1-20 வரை, சித்தயோகம், இராகு காலம் பகல் 12-04 முதல் 1-34 வரை, சுபநேரம் மாலை 4-34 முதல் 6-04 வரை பிரதோச விரதம்.

மேடம்: விரும்பியவை கிடைத்தல், குடும்பச் சுகம், மதிப்பு.

இடபம்: மனக்கிலேசம். நண்பர் பகை, அலைச்சல் மிகுதி

மிதுனம்: அகங்காரம், வசதியான மாற்றம், குடும்பச் சுகம்.

கடகம்: மயக்கம், அடிபணிதல், இனசனப்பகை.

சிங்கம், தெய்வீக தரிசனம், ஆடம்பரச் செலவு, தொழில் சிறப்பு.

கன்னி: கடமையுணர்வு, மாதர் உதவி, சமபோஜனம்.

துலாம்: கருத்து மோதல், குடும்ப தொல்லை, பணமுடை.

விருச்சிகம்: விபரீத முடிவு, பணியாள் தொல்லை, ரோக வேதனை.

தனுசு: மனக்களிப்பு, காரிய சித்தி, குடும்பச் சிறப்பு.

மகரம்: தொழில் லாபம், புதிய முயற்சி, தற்பெருமை.

கும்பம்: தனிமையடைதல், தொழில் நஷ்டம், மனச் சுமை.

மீனம்: ஏமாற்றம், தந்தை கோபம், வெறுப்பு.

- ஜோஸ்யர்

## வியாழமாற்றம் இன்று...

சுபக்கிரகங்களில் ஒன்றுன வியாழ பகவான் (குரு) இன்று புதன் கிழமை நள்ளிரவு 12 மணி 03 நிமிடத்திற்கு வாக்கிய பஞ்சாங்கப் படி கர்க்கடக ராசியிலிருந்து சிங்க ராசிக்குள் பிரவேசிக்கின்றுர். திருக்கணித பஞ்சாங்கப்படி வியாழமாற்றம் ஆகஸ்ட் மாதம் 14ம் திகதியே நிகழ்கின்றது. வியாழ மாற்றத்தினுல் மேட ராசியாளருக்கு 5ல் வியாழனும், இடப ராசியாளருக்கு 4ல் வியாழனும், மிதுன ராசியாளருக்கு 3ல் வியாழனும், கர்க்கடக ராசியாளருக்கு 2ல் வியாழனும். சிங்க ராசியாளருக்கு லக்கினத்தில் வியாழனும், கன்னி ராசியாளருக்கு 12ல் வியாழனும், துலாம் ராசியாளருக்கு 11ல் வியாழனும், விருச்சிகராசியாளருக்கு 10ல் வியாழனும், தனுசு ராசியாளருக்கு 9ல் வியாழனும், மகர ராசியாளருக்கு அட்டமத்தில் வியாழனும், கும்ப ராசியாளருக்கு 7ல் வியாழனும், மீன ராசியாளருக்கு 6ல் வியானும் சஞ்சரித்து பலன் செய்வார். (ஜோ)

## இந்திய மத்தியபுலனாய்வுக்கு பெருமளவு பாதுகாப்பு

[சென்னை]

ராஜீவ் காந்தி கொலை விசாரணையில் ஈடுபட்டுவரும் 'இந்திய மத்திய புலனாய்வு' [சி பி. ஐ.]துறைக்கு பல்வேறு மிரட்டல்கள் வருவதையடுத்து இதன் தமிழக அலுவலகத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் ராணுவ தலைமையகம் மீது இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்பு போன்று தமிழக அலுவலகமான 'மல்லிகை'யிலும் குண்டுத்தாக்குதல் நடைபெறலாமெனவும் சி.பி. ஐ அச்சமடைந்துள்ளது.

இதையடுத்து இவ் அலுவலகத்திற்கு பெருமளவு படையினர் பாதுகாப்பிற்காக கொண்டு வரப்பட்டுள்ளனர். முன்னர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் முற்றுக மாற்றப்பட்டு புதிய படையினர் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இதேவேளை இங்கு பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளதால் ராஜீவ் கொலை தொடர்பாக தகவல் தர வருபவர்கள் மிரண்டு போய் விடுகிறுர்கள் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [சி]

## சுகாதார ஆய்வு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதர திணைக்களத்தினுல் நவாலி வடக்கு கிராமத்தில் தொழுநோய் ஆய்வு உட்பட சுகாதார சம்பந்தமான ஆய்வு ஒன்றுஎதிர்வரும் 10-ம் திகதி நடத்தப்படவுள்ளது.

இதற்காக40 பேர் சுகாதார தொண்டர்களாக தெரிவு செய்யப்பட்டுஇருநாள் பயிற்சி சென். பீற்றர்ஸ் றேு.க. வித்தியாலயத்தில் அண்மையில் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (72)

## இன்று சாந்தி ஹோமம்

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் பழம்பதி பிள்ளையார் தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வியாழ மாற்ற சாந்தி ஹோமம், விசேட அபிஷேகம் ஆராதனை, கூட்டுப்பிரார்த்தனை முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## சமய அறிவுப் போட்டி

(பண்டத்தரிப்பு)

சங்கானை மேற்கு சனசமூக நிலையம், வடலியடைப்பு புருதனை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டுச் சமயஅறிவுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. வடலியடைப்புக் கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (72)

அமெரிக்க பல்கலைக்கழகத்தில்

# வெற்றிகரமாக நிறைவுற்ற தமிழீழ ஆய்வு மாநாடு

[வாஷிங்டன்]
அமெரிக்காவில் கலிபோர்னியாவில் அண்மையில் 'தமிழீழ ஆய்வு' மாநாடு வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. இம்மாநாட்டை எதிர்த்து பெருமளவு சிங்களவர் மாநாடு நடைபெற்ற பல்கலைக்கழகத்தின் வெளியே ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர்.

'சக்கமண்டோ' பல்கலைக்கழகத்தில் ஜூலை 19ம் திகதி முதல் 21ம் திகதிவரை இம்மாநாடு நடைபெற்றது, இம்மாநாட்டில் தமிழ் அறிஞர்கள் உட்பட பல நாட்டு அறிஞர்கள் பலர் ஆய்வுரைகளையும், விமர்சன உரைகளையும் நிகழ்த்தியுள்ளனர்.

இம்மாநாட்டை தடை செய்யுமாறு இலங்கை தரப்பும், அமெக்கா வாழ் சிங்களவரும் அமெரிக்க அரசைக் கோரியிருந்தபோதும் இக்கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்திருந்ததுடன் இம்மாநாட்டை நடாத்த அமைப்பாளர்களுக்கு பூரண ஆதரவையும் வழங்கியிருந்தது.

இதையடுத்து மாநாடு நடைபெற்ற 3 நாட்களும் பல்கலைக்கழகத்தின் முன் சிங்களவர் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். பொலிசாரின் பலத்த பாதுகாப்பால் அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை.

இம்மாநாட்டில் 'விஜயன் வருகைக்கு முன் இலங்கை வரலாறு, வடக்கு- கிழக்குமக்களின் தமிழீழத்தின் எதிர்கால நிலைமைகள் குறித்து பல ஆய்வுரைகளும், விளக்கவுரைகளும் விவாத அரங்கும் இடம்பெற்றுள்ளன. (சி)

# மருத்துவர் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

(சென்னை)
திருச்சி மாவட்டத்தில் மருத்துவர் ஒருவரின் வீட்டில் இருந்து ஒரு லட்சம் வெடி குண்டுகளும், பல துப்பாக்கிகளும், தகவல் தொடர்புச் சாதனங்களும், மருந்துப் பொருட்களும், சீருடைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளனவாம்.

இந்த மருத்துவரின் வீட்டைப் புலிகள் ஆயுதக் கிடங்காக மாத்திரம் பயன்படுத்தாமல், தங்குமிடமாகவும் பயன்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோபாலகிருஷ்ணன் எனப்படும் இந்த மருத்துவருக்கும் ராஜீவ் கொலைக்கும் தொடர்பு எதுவும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

# சிங்களப் பகுதிக்கு யான்ஓயா திருப்பம்

[திருமலை]
திருகோணமலை விவசாயிகளுக்கு அதிக பலனைக் கொடுத்துவரும் யான் ஓயா ஆறு, இடைநடுவில் அணை கட்டப்பட்டு சிங்களப் பிரதேசத்திற்கு திசை திருப்பப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு 15 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. [153]

# ஊர்காவலரை தாக்கிய நாலு பொலிஸார் கைது

(கொழும்பு)
இரு ஊர்காவல்படையின் மீது தாக்குதல் நடத்தியதற்காக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டரும், பொலிஸாரும் கடந்த சனிக்கிழமை அங்கு கடமையிலிருந்த இரு ஊர்காவல்படையினரை தாக்கியதுடன் தன்னியக்கத் துப்பாக்கியால் சுடப்போவதாகவும் மிரட்டினராம்.

இதனையடுத்து நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஆனையிறவு முகாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்.

படையினர் பிரவேசித்துள்ள போதிலும் விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் இன்னமும் இம்முகாமிற்குள் இறங்க முடியாத நிலையிலேயே இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

## ஹெலி தாக்குதல்

[யாழ்ப்பாணம்]
வட்டுக்கோட்டை கிழக்குப் பகுதியில், நேற்றுப் பிற்பகல் 5-00 மணியளவில் ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது, [க]

# 'மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளான சுரேஷ் (சுப்பிரமணியம் இளங்கோவன் கொட்டடி), அலன் (கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் மட்டக்களப்பு) ஆகியோரின் புகழுடல்கள் நேற்று கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் பிரமுகர் குகதாஸ் மாஸ்டர் மற்றும் பல பிரமுகர்களின அஞ்சலியுரையைத் தொடர்ந்து போராளிகளின் புகழுடல்கள் பொதுமக்களின் கணணீரஞ்சலியுடன் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. [க]

# கடலில் கேட்ட 'மர்ம ஒலிகள்'

(சென்னை)
மதுரைக்கு நேராகவுள்ள கடல் பகுதியில் 'மர்ம ஒலிகளை' இந்திய கடற்படையினர் பதிவு செய்துள்ளனராம்.

இந்த ஒலி அலைகள் பெரும்பாலும் மதுரைப் பகுதியிலிருந்து புலிகள் மேற்கொண்ட தகவல் பரிமாற்ற ஒலி அலைகளாகவே இருக்க வேண்டுமென்றும் இதனை கண்டுபிடிக்க தாம் முயன்றுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (சி)

# தி. மு. க. வேட்பாளர் வேட்புமனு நிராகரிப்பு

(சென்னை)
தமிழ்நாடு காங்கேயன் சட்டசபை தொகுதியில் போட்டியிட தி. மு. க. வேட்பாளர் சமர்ப்பித்த வேட்புமனு நேற்று நிராகரிக்கப்பட்டது.

வேட்புமனு சமர்ப்பிக்கும் நேரம் 3-00 மணியாக அறிவிக்கப்பட்டிருந்தும், அவ்வேட்பாளர் 3-20க்கே தனது கட்சிச் செயலாளரின் கடிதத்துடன் வேட்புமனுவைச் சமர்ப்பித்திருந்தார்.

இதனால் காலதாமதம் பற்றி அங்கு நின்ற சுயேட்சை வேட்பாளர் சுட்டிக் காட்டவே, அவரது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக தமிழ்நாடு தேர்தல் கமிஷனர் திரு. ரகுபதி கூறினார். [பூ]

## ஆனையிறவு பகுதியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெருமளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் படையினர் பலத்த சிரமமடைந்துவருகின்றனர். இவற்றுள் சிக்குண்டு பலர் படுகாயமடைந்துமுள்ளனராம்.

இதனால் முகாமை விஸ்தரிக்கும் பணி மிக மிகச் சிக்கலாக இருக்குமென்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (153-சி)

## சாரணர்களுக்கு

(யாழ்ப்பாணம்)
அவசரகால சாரணர் சேவையில் ஈடுபட்டிருந்த வடமாகணத்தை சேர்ந்த சகல சாரணர்களும், சாரணத்தலைவர்களும் குருளை சாரணத் தலைவர்களும் சகல சாரண முக்கியஸ்தர்களும் இன்று புதன்கிழமை மாலை 3-30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பாலம் பொதுப்பணி மன்றத்தில் கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## ச.ச. நிலையங்களின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்]
விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் அரசியற் பொறுப்பாளர் திரு. மூர்த்தி யாழ். மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும் இம்மாதம் 10-ம் திகதி சந்திக்கவுள்ளார்.

இதற்கான கலந்துரையாடல் ஒன்று இம் மாதம் 10ம் திகதி யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ். பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் சு. டிவகலாலாவால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# ஐந்து தமிழ் இளைஞர்கள் 1000 ரூபா பிணையில் விடுதலை

(சென்னை)
செல்லுபடியாகாத 'கடவுச்சீட்டு' வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் செங்கல்பட்டு நீதிமன்றத்தினால் ஆயிரம் ரூபா பிணையில் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர்.

1989-ம் ஆண்டு காலாவதியான கடவுட்சீட்டு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் ஜூன் 30-ம் திகதி இலங்கைத்தமிழ் இளைஞர்களான நரேந்திரன், ச. சசிதரன், சுதர்சன், செல்வரத்தினம், யோகானந்தன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

எச்சந்தர்ப்பத்திலும் பொலிஸில் ஆஜராக வேண்டும் என்ற உத்தரவின் பேரிலே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

## தமிழீழ மீட்பு நிதி

[யாழ்ப்பாணம்]
தீவகம் மற்றும் காரைநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து 10 - 08 - 91 சனிக்கிழமை முற்பகல் 10 - 00 மணிக்கு மீட்பு நிதி பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் அன்றைய தினம் கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ்.மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## மகிழ்வுடன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பலர் இறுதி அஞ்சலியைச் செலுத்திய பின்பு மாலையில் புகழுடம்புகள் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச்செல்ல ஆயத்தமானநேரத்தில் மேற்படி மூன்று மாணவிகளும் அங்கு வந்த ஏனைய பெண் போராளிகள் வாகனம் ஒன்றில் ஏறித் தாங்களும் போராட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புவதாகக் கூறி மகிழ்ச்சியுடன் சென்றனர். (71)

## மோதலை தீர்த்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"பிரதானமாக அது இந்திய முயற்சியாக இருந்தாலென்ன; இந்தியாவின் ஆசீர்வாதத்துடன் வேறு தரப்பினரின் முயற்சியாய் இருந்தாலென்ன; இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமென நாட்டம் கொண்டுள்ள ஒவ்வொருவரும் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினருக்குமிடையே சாத்தியமான முறையில் விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்குப் பாடுபடவேண்டும்'' என்றார். (பூ)

# மலையகத்தில் தேடுதல் 7 பேர் கைது

(மாத்தளை)
மலையகத்தில் 27 தோட்டங்களில் அண்மையில் பொலிஸார் திடீர்த் தேடுதல் நடத்தி ஏழு பேரைக் கைது செய்துள்ளனர்.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து விசேட பொலிஸ் படையினரால் இத்தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

மாத்தளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த வெல்லாவெளியில் உள்ள 27 தோட்டங்களே முற்றுகைக்குள்ளானவையாகும்

# எரிபொருள் விநியோகிக்க புதிய நடவடிக்கை

(வவுனியா)
வவுனியாவில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு எரிபொருள் விநியோகம்செய்வதற்கு புதிய நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

வவுனியாப் பகுதியில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு கடமைக்குச் செல்வதற்கு வேண்டிய டீசல், பெற்றோல், மண்ணெண்ணை போன்றவற்றை விசேட சிபாரிசின் பேரில் வழங்குவதற்கு வவுனியா இராணுவ முகாம் அதிகாரிகள் ஏற்பாடுகள் செய்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் பட்சத்திலும் வடபகுதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னருமே இது சாத்தியமாகும் என்றும் அவர் கூறினார். (வி)

## சகல கட்சிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசாவுக்கு கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சி ஒன்று கடிதம் அனுப்பிவைத்துள்ளது,

சர்வகட்சி மாநாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் மீண்டும் பேச்சுவார்த்தையொன்றை தாமதமின்றி ஆரம்பித்து இனப்பிரச்சனைக்கு தீர்வு காணுமாறு அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/189388/81